00140

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சமூக கற்கைகள் துறை
விஞ்ஞானத்தில் இளங்கலைமாணி பட்டம் - (2016/2017)
இறுதிப் பரீட்சை – மட்டம் III (பருவம் II)
SSU 1198 - இலங்கை சமூகம் - அறிமுகம்

காலம்: இரண்டு மணித்தியாலங்கள் (2 மணித்தியாலங்கள்)

திகதி: 25.07.2017 நேரம்: மு.ப 9.30 – மு.ப 11.30

அறிவுறுத்தல்கள்:

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. ஒவ்வொரு வினாவும் 25 புள்ளிகளைக் கொண்டது

1. எங்களில் பெரும்பாலானவர்கள் இந் நாட்டிலே பிறந்து பெருக்கமடைந்துள்ளதோடு இலங்கையின் சமூக கலாச்சார சூழல் பற்றிய ஆழமான விழிப்புணர்வையும் கொண்டுள்ளார்கள். அவ்வாறாயின் இலங்கையின் சமூகத்தையும் கலாச்சாரத்தையும் புரிந்துகொள்வதற்கு ஏன் நாங்கள் ஒரு விசேட பாடத்தினைக் கற்க வேண்டும்? கலந்துரையாடுக.

2. நாட்டினை முன்னோக்கி நகர்த்துவதற்கும் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் இலங்கை பாராளுமன்ற முறைமையானது எந்தளவுக்கு உதவியாக இருக்கும்? விவாதிக்குக.

3. சட்டத்தின் ஆட்சி மற்றும் நல் அரசாங்கம் என்ற உறுதிமொழியுடன் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கத்தோடு தொடர்புபடுத்தி ஜனாதிபதி முறையின் நன்மை தீமைகளை ஆராய்க.

4. இலங்கையானது ஒரு பல மத மற்றும் பல கலாச்சார நாடு என ஏன் நாங்கள் விபரிக்கிறோம்? விவாதிக்குக.

5. சிங்கள மற்றும் தமிழ் குடும்ப உறவுமுறை அமைப்பின் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை விபரிக்குக.

6. சமூகத்தில் ஆண்களும் பெண்களும் சமனற்ற முறையிலே மதிக்கப்படுகிறார்களா? அவ்வாறான பாகுபாட்டினை நாங்கள் அங்கீகரிக்க முடியுமா? பொருத்தமான உதாரணங்களுடன் விபரிக்குக.

7. ஒரு நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் சமூக வகுப்பு உருவாக்கத்திற்கும் இடையிலான தொடர்பு யாது?

8. எமது நகரங்களில் ஏற்படும் குப்பைகளின் பெருக்கமானது இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியின் ஒரு விளைவா? விமர்சனரீதியாக கலந்துரையாடுக.

9. பின்வருவனவற்றில் ஏதேனும் ஐந்திற்கு (05) சிறு குறிப்பு எழுதுக.

I. இலங்கையில் மதசார்ந்த பதற்றம்
II. இலங்கை அரசியலமைப்பின் சீர்திருத்தமும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை நீக்கலும்
III. சமூக அசைவின் பாரம்பரிய மற்றும் நவீன அடிப்படைகள்
IV. மாற்றமடையும் இலங்கை சமூகத்தின் விழுமியங்களும் பெறுமதிகளும்
V. நாளாந்த சமூக பிரச்சனைகளை தீர்ப்பதற்காக இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானங்களுக்கிடையிலான ஒரு தொடர்பின் தேவைப்பாடு
VI. இயற்கை அழிவுகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் மக்களின் ஒற்றுமையும்
VII. மூன்று தசாப்த இன முரண்பாட்டின் பின்னரான இலங்கையினை மீள கட்டியெழுப்புவதில் உள்ள தடைகள்

******பதிப்புரிமையுடையது******